**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**

அ.வ.எண். 12/2017

பெயர் – கிருபாகரண்(பி.வா.சா.1)

நாள் – 13.08.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1) தபசில் சொத்து 1938ம் ஆண்டு முன்பாக யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.169/111 ஆகும். தபசில் சொத்தின் அளவுகள் என்ன என்றால் 6 ஏக்கர் 20 சென்ட் ஆகும். மேற்படி தபசில் சொத்து எந்த ஊரில் இருக்கிறது என்றால் சத்திரப்பட்டி கிராமத்தில் இருக்கிறது. மேற்படி தபசில் சொத்தானது எதன் அடிப்படையில் ஏலம் நடவடிக்கைக்கு உட்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஏலத்தில் எனது தாத்தா பாட்டியின் பெயருக்கு வாங்கியது மட்டும் தெரியும்.

2) நீதிமன்ற ஏலத்திற்கு முன்பு சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை குறித்து நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.10–ன் மூலம் வேலுச்சாமி என்பவருக்கு தபசில் சொத்தை கிரையம் கொடுத்ததில் அதில் குறிப்பிட்டுள்ள வருடங்கள் நீதிமன்ற வழக்கு எண்கள் அனைத்தும் சரியானவை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10–ல் குறிப்பிட்டுள்ள ' 1935ம் ஆண்டில் அ.வ.எண்.105, 1939–ன் படி EP.No.399–ன் படி ஏல கிரையம் பெற்று பட்டா ' குறித்து ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3) மேற்படி கூறிய அ.வ.எண்.105 ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு தாக்கல் செய்தால் வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் தாக்கல் செய்துள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆன ஏலச்சான்றிதழில் நீதிமன்ற முத்திரை இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் தபசில் சொத்தை வில்லங்கம் செய்வதற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனவே தான் அதில் முத்திரை இல்லை என்றால் சரியல்ல.

4) வழக்கு சொத்து சம்மந்தமாக நான் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு சென்றேனா என்றால் சிவகாசி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றேன், வருடம் ஞாபகமில்லை. அங்கு யார் மீது மனு செய்தேன் என்றால் ஹாத்தீம் பாஷா மற்றும் அவரது உறவினர் மனு செய்தேன்(சாட்சி மற்ற விபரம் எனக்கு ஞாபகமில்லை என்று கூறியுள்ளார், வயது 80 ஆகும்). எதற்காக மனு செய்தேன் என்றால் ஒரு முறை நான் வரி செலுத்துவதற்கு சென்ற போது எனக்கு 20 சென்ட் தான் உள்ளது என்றும், 6 ஏக்கர் யூ.டி.ஆரில் போய்விட்டது என்றும் கூறினார்கள், அதன் நிமித்தம் மனு செய்தேன்.

5) 1940ம் ஆண்டு வழக்கு சொத்தை விவசாயம் செய்து அனுபவம் செய்து வந்தேனா என்றால் விவசாயம் செய்து அனுபவம் செய்து வந்ததாக எனது அப்பா சொன்னார். வழக்கு சொத்தை நான் விவசாயம் செய்து அனுபவித்து வந்தேனா என்றால் இல்லை. நானும் எனது குடும்பத்தாரும் எத்தனை வருடமாக மதுரையில் குடியிருந்து வந்தோம் என்றால் சுமார் 35 வருடம் இருந்து வந்தோம். நான் பிறந்ததிலிருந்து மதுரையில் இருந்து வந்தேன். எனது அப்பா 1972ம் வருடம் பணி ஓய்வு பெற்ற பிறகு சாத்தூருக்கு வந்தோம்.

6) எனது அப்பா 1972ம் வருடம் பணி ஓய்வு பெற்ற பிறகு சாத்தூருக்கு வந்தோம் என்று நான் கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்லுவது என்றால் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு எனது அப்பா விவசாயம் செய்து வந்திருந்தார் என்றால் என்னென்ன பயிரிட்டு இருப்பார் என்பதை காட்ட கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் விசாரணை எந்த காலகட்டத்தில் நடைபெற்றது என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கோட்டாட்சியர் அலுவலக முத்திரை இல்லை என்றால் கோட்டாட்சியரின் கையெழுத்து உள்ளது.

7) மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணம் உண்மையான ஆவணம் என்றால் அதில் கோட்டாட்சியர் அலுவலக முத்திரை பெறப்பட்டிருக்கும், அவ்வாறு முத்திரை பெறப்படாததால் அது மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை வில்லங்கம் செய்வதற்காக பி.வா.சா.ஆ.2 ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. தபசில் சொத்தை தவிர சாத்தூரில் என் பெயரிலும், எனது தந்தை

பெயரிலும் வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் 1958ம் வருடம் வீடு ஒன்று இருந்தது, பின்பு எனது அப்பா விற்றுவிட்டார்.

8) பி.வா.சா.ஆ.3, 4, 5, 6 ஆகிய ஆவணங்களில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, பட்டா எண் மட்டும் உள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.3 முதல் 6 வரையிலான ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தின் அடிப்படையில் மோசடியாக பி.வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களை உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி கூறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.10-ஐ மோசடியாக உற்பத்தி செய்து 10ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

9) மேற்படி கூறிய ஆவணங்களின் அடிப்படையில் தான் 10ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.11 மற்றும் 12-ஐ உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், பி.வா.சா.ஆ.8 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தபசில் சொத்து ஆதியில் அப்துல்ரகுமானுக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அப்துல்ரகுமானுக்கு ஹாத்தீம்பாஷா மகன் என்றால் சரிதான். அப்துல்ரகுமான் தபசில் சொத்தை ஹாத்தீம்பாஷாவிற்கு பாகப்பத்திரம் மூலம் எழுதி கொடுத்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

10) அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் தான் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் பட்டா பெயர் மாற்றம் வாதி தரப்பில் செய்திருக்கலாம். ஹாத்தீம்பாஷாவின் மனைவி பியாரி என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி ஹாத்தீம்பாஷாவின் மனைவி பியாரிக்கும், அவரது மூத்த மகன் காதர்பாஷாவிற்கும் தானசெட்டில்மெண்ட் 2001ம் ஆண்டில் எழுதிக் கொடுத்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஹாத்தீம்பாஷா 2014ல் இறந்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஹாத்தீம்பாஷாவின் மனைவி பியாரி 04.12.2014 இறந்ததை குறித்தும், அவரது மூத்த மகன் காதர்பாஷா அவரது பாதி பாகத்தையும், அம்மாவின் பாகத்திலுள்ள பாதி பாகத்தையும் சேர்த்து தாவா வழக்கின் வாதி ஷாஜகானுக்கு தானசெட்டிமெண்ட் எழுதி கொடுத்தை குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11) மேற்படி ஷாஜகான் வங்கியில் 21.03.2016 அன்று லோன் எடுப்பதற்காக வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்த போது தான் நாங்கள் 10ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய வில்லங்க விவகாரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எந்தவித உரிமையும், அனுபவும் கிடையாது என்றால் சரியல்ல, அது எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து. தபசில் சொத்தை எவ்வளவு பணத்திற்கு ஏலம் எடுத்தார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை. மேற்படி தபசில் சொத்தை எவ்வளவு பணத்திற்கு ஏலம் எடுத்ததை குறித்து எனது சகோதரர்களுக்கு தெரியுமா என்றால் எனக்கே தெரியாது, எனது இளைய சகோதரர்களுக்கு எப்படி தெரியும், பத்திரத்தில் போடப்பட்ட தொகையாக இருக்கும். பத்திரம் என்ன பத்திரம் என்றால் நீதிமன்றத்தின் ஏல கிரைய பத்திரமாகும். நீதிமன்றம் மூலம் எனக்கு எவ்வித ஏல பத்திரமும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கான விபரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னார்கள் என்றால் நானும், எனது சகோதரர்களும் சொன்னோம். வழக்கிற்கான ஆவணங்களை வழக்கறிஞரிடம் யார் கொடுத்தார்கள் என்றால் என் சகோதரர்களிடமிருந்து வாங்கி நான் தான் கொடுத்தேன்.

12) 2017ம் ஆண்டுக்கு பின்னர் தான் இந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. மேற்படி நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் என்னாலும், எனது சகோதரர்களாலும், 10ம் பிரதிவாதியாலும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கின் 1 முதல் 9 பிரதிவாதிகளால் 10ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

13) மேற்படி ஆவணத்தை 11ம் பிரதிவாதியான சார்பதிவாளர் அவர்கள் அலுவலக கோப்பிலிருந்து நீக்கரவு செய்யப்பட வேண்டியது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது, அது அவரது இஷ்டம். இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் கிடைக்கத்தக்கதல்ல.